# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.60/2022** **நாள் : 13.10.2022**

**தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிர்நீர் இயக்க (Jal Jeevan Mission) திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு ஒன்றிய நீர்வளத்துறை (Jal Sakthi) அமைச்சர் திரு.கஜேந்திரசிங் செகாவத் அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிர்நீர் இயக்க (Jal Jeevan Mission) திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு ஒன்றிய நீர் வளத்துறை (Jal Sakthi) அமைச்சர் திரு.கஜேந்திரசிங் செகாவத் அவர்கள் தலைமையில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திருகே.ஆர்.பெரிய கருப்பன் ஆகியோர் முன்னிலையில் இன்று (13.10.2022) சென்னை எம்.ஆர்.சி. நகரில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 124.94 இலட்சம் வீடுகளில், 69.50 இலட்சம் (55.63%) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இது தேசிய சராசரியான 53.96%-த்தை விட அதிகம். இந்த ஆண்டின் முதல் மற்றும் இரண்டாவது காலாண்டிற்கான இலக்கு 12.10 இலட்சம் ஆகும். இலக்கை விட அதிகமாக 16.25 இலட்சம் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு 134% சாதனை அடைந்துள்ளது. 2022-23ம் ஆண்டு இலக்கு 28.48 இலட்சம். இதுவரை 16.51 இலட்சம் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிர்நீர் இயக்க திட்டப்பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இத்திட்டங்களை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கவும் ஆலோசிக்கப்பட்டது.

.....2.

தமிழ்நாடு நதி நீரினை உபயோகிக்கும் மாநிலங்களில், கீழ்ப்பகுதியில் உள்ள மாநிலமாகும். ஆதலால், குடிநீர் திட்டங்களின் நிலைத்தன்மையை உறுதி செய்ய சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி நிலத்தடி நீரை மேம்படுத்த சிறப்பு திட்டத்தை கோரவும், ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல், முக்கிய ஆறுகளில் ஓடும் உபரிநீரை பயன்படுத்தி அருகிலுள்ள நீர்நிலைகளில் நிரப்பி நிலத்தடி நீராதாரத்தை பெருக்குதல் போன்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றிய அரசின் குடிநீர் வழங்கல் மற்றும் தூய்மை திட்டத்துறை செயலாளர் திருமதி வினி மஹாஜன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பி.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், ஒன்றிய அரசின் குடிநீர் வழங்கல் மற்றும் தூய்மை திட்டத்துறை இணைச் செயலாளர் திரு.சமீர் குமார், இ.ஆ.ப., அவர்கள், ஒன்றிய அரசின் உயிர்நீர் இயக்கத்தின் கூடுதல் செயலாளர் மற்றும் இயக்குநர் திரு.விகாஷ் ஷீல், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு உயிர்நீர் இயக்க திட்ட இயக்குநர் திரு.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சித்துறை ஆணையாளர் திரு.தாரேஷ் அகமது, இ.ஆ.ப., அவர்கள், ஒன்றிய அரசின் உயிர்நீர் இயக்கத்தின் இயக்குநர் டாக்டர் விஸ்வகண்ணன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்